

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நேற்று (12.06.2024) தலைமைச் செயலகத்தில், 2024–25 நிதி ஆண்டிற்கான பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கை, கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் புதிய அறிவிப்புகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் ஆர். கஜலட்சுமி , ஆசிரிய தேர்வாணையத் தலைவர் வெங்கடப்பிரியா, தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன், (ஓய்வு) பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் மு. பழனிச்சாமி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் எஸ்.நாகராஜமுருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், நேற்று (12.6.2024) குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தையொட்டி சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் முறை அற்ற மாநிலமாக மாற்றிட அனைத்து அலுவலர்களும் உறுதி ஏற்றனர். இந்நிகழ்வில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத் தலைவர் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

# ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

### மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை, ஜூன் 13 -

கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்" புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திர ளாக கலந்து கொள்ள வேண்டுமென புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: வருகின்ற ஜூன் 15 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் வெற்றி நாயகன் தமிழ்நாடு முதல மைச்சர். கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலை வர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா,

சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் "முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்" புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், இக்கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள். இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், நகர்மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் பேரூராட்சி மன்ற தலைவர் கள், துணைத் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள்.

மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள். முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதி நிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி,

பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, சிறுபான்மை யினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில் நுட்ப பிரிவு அணி, சுற்று ச் சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள் கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சென்னையில்

# குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புப் பேரணி!

### அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில்!

சென்னை, ஜூன் 13 -

குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நேற்று (12.06.2024) சென்னையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வெ. கணேசன், தலைமையில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின நிகழ்ச்சி நடைபெற்றது.

குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி உலக அளவில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புதினவிழிப்புணர்வு நிகழ்ச்சி தொழிலாளர் துறையின் சார்பாக நேற்று (12.06.2024) சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அனுசரிக்கப் படுகிறது.

இன்றைய தினத்தில் மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புதினவிழிப்புணர்வு நிகழ்ச்சி, சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக விழா அரங்கத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இப்பேரணியில் அமைச்சர் தலைமையில் கரகாட்டம், பறையாட்டம் மற்றும் மரக்கால் ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான கையெழுத்து இயக்கம் துவக்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக உறுதி மொழி எடுக்கப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்தான விழிப்புணர்வு குறும்படம் வெளியிடப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்து மீட்கப்பட்ட வர்கள் அவர்களது அனுபவங்களை பகிர்ந்தனர். இந்நிகழ்ச்சியில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் சிறப்பாக பணிபுரிந்த கள அலுவலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங் களுக்கு கேடயம் வழங்கப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த விழிப்புணர்வு ஒரு நிமிட குறும்படம் மற்றும் ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற கல்லூரி மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2025ம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழ்நாட்டினை உருவாக்கிட அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுவோம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார்ஜெயந்த், முதன்மை செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், மு.வே. செந்தில் குமார், இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், திரையுலக பிரப லங்கள், தொழிலாளர் துறை உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் ஏற்பாட்டில்

# மாதவரம் 23 ‘அ’ வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா !

### புழல் எம். நாராயணன் தலைமையில்

### மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

சென்னை, ஜூன் 13 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 23அ வட்டக் கழகத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

23 அ வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் ஏற்பாட்டில் காவாங்கரை வட்டக் கழக அலுவலகம் அருகே நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமை தாங்கினார்.

பொதுமக்கள் மற்றும் வியாபார பெருங்குடி மக்கள் என 1000 பேருக்கு அறுசுவை அசைவ பிரியாணி மற்றும் மகளிருக்கு புடவைகள் ஆகியவற்றை, சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ வழங்கினார்.

வட்டக் கழக நிர்வாகிகள் அ. ராமச்சந்திரன், எம்.உசேன் மொய்தீன், பி .சுதாகர், அம்மு மூர்த்தி, பி. அறிவழகன், பி. முத்து கிருஷ்ணன், டி. பார்பேன், அப்துல் சமது, வி.ஹரி, மகளிர் அணி கலைச்செல்வி, ஆர். சுதா,ஜெ. யுவராணி, டி. லாரன்ஸ், பி. வாசுதேவன், 23வது வட்ட நிர்வாகிகள் து. எழில்குமார், எம். விக்னேஸ்வரன், டி. நெல்சன் ராஜ், டி. உதயகுமார், ஜி.அன்பழகன், சிட்டி சேகர், வி .ஆர்.கே.ஜவகர், ஜே. சாமிநாதன், என். யுவராஜ், ஜி.வயலட்ராணி, பிரியா, பாரதி, தேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு கழக கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் கழகத்தினர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

### மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு

# இலவச சிறப்புக் கல்வி - தசைப் பயிற்சி!

### மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அறிவிப்பு!

சென்னை, ஜூன்.13-

தமிழ்நாடு அரசு மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மற்றும் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி மூலம் சிறப்பு கல்வி, தசைப்பயிற்சி போன்றவை கட்டணம் ஏதும் இல்லாமல் வழங்கப் படுகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப்பள்ளிகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் 104 சிறப்புப்பள்ளிகள் விடுதியுடன் செயல்படுகின்றன. விடுதியில் தங்கி கல்வி பயிலும் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு எவ்வித கட்டணமின்றி சிறப்பு ஆசிரியர்கள் மூலம் சிறப்பு கல்வி மற்றும் தசைப்பயிற்சியாளர் மூலம் தசைப்பயிற்சி போன்றவை வழங்கப்படுகின்றன. இவை தவிர விடுதியில் தங்கி கல்வி பயிலும் மாணவ / மாணவியர்கள் உணவூட்டு மான்யமாக ரூ.1200 மாதம் ஒரு நபருக்கு வழங்கப்படுவதோடு இச்சிறப்பு பள்ளிகளில் உள்ள இரண்டு சிறப்பு ஆசிரியர்கள், ஒரு தசைப்பயிற்சியாளர் என மூன்று நபருக்கு ஊதிய மான்யம் வழங்கப்படுகின்றது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் விடுதியுடன் கூடிய மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம், தாம்பரத்தில் செயல்பட்டு வருகின்றது.

இவை மட்டுமின்றி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக 430 பகல் நேர பராமரிப்பு மையங்கள் தமிழ்நாடு முழுவதும் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இம்மையத்தில் பணியாற்றும் சிறப்பு பயிற்றுநர்கள், தசைப்பயிற்சியாளர்கள் அங்கு வருகின்ற மனவளர்ச்சி குன்றிய மாணவ / மாணவியர்களுக்கு சிறப்புக்கல்வி, மறுவாழ்வு பயிற்சிகள் அளித்து வருகின்றனர். இவர்களைத் தவிர ஒவ்வொரு வட்டாரத்திலும் 5 சிறப்பு பயிற்றுனர்கள்,

1 தசைப்பயிற்சியாளர்களும் உள்ளனர். அவர்கள் அவ்வட்டாரத்தில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு சிறப்பு கல்வி, தசைப்பயிற்சி போன்றவற்றை வழங்குகின்றனர். பள்ளி செல்லாத குழந்தைகளுக்கு வீட்டிற்கு சென்று கல்வி, தசைப்பயிற்சி போன்றவற்றை வழங்குகின்றனர்.

இவை தவிர ஆரம்பகாலத்திலே இச்சிறப்பு குழந்தைகளை கண்டறிந்து பயிற்சி அளிக்கும் விதமாக ஒவ்வொரு மாவட்டதிலும் மனவளர்ச்சி குன்றியோர்களுக்கான ஆரம்பகால பயிற்சி மையம் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இம்மையங்களில் ஐந்து சிறப்பாசிரியர்கள் உள்ளனர்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சி இல்லம் செயல்படுத்தப்படுகின்றது. இவ்வில்லத்திலும் 40 நபர்கள் வரை தங்கி பயன் பெறுகின்றனர். தமிழ்நாடு முழுவதும் 67 மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களில் உள்ள மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி, பயிற்சி போன்றவை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வில்லத்தினை நடத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஊதிய மான்யம், உணவூட்டு மான்யம், வாடகை மான்யம் மற்றும் சில்லரை செலவினம் போன்றவை வழங்கப்படுகிறது.

மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் தங்கள் குழந்தைகளை மேற்கண்ட பள்ளிகள் / இல்லங்கள் / பயிற்சி மையங்களில் சேர்த்து கல்வி மற்றும் பயிற்சிகளை எவ்வித கட்டணமின்றி பெற்று பயனடையுமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களால் கேட்டுக்கொள்ளப் படுகிறது.





பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள மறைமலை அடிகளார் அரசு மேல்நிலை பள்ளியில் கோடை விடுமுறை முடிந்து பள்ளிக்கு வந்த மாணவ மாணவிகளுக்கு *தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் வரவேற்று இந்த ஆண்டுக்கான பாடநூல் புத்தகங்களை வழங்கினர் தொடர்ந்து ஐ. லியோனி சிறப்புரை ஆற்றினார். அதனை தொடர்ந்து பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார்கள். இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை மற்றும் தலைமை ஆசிரியர், ஆசிரியர் பெற்றோர் கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.






சென்னையில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நேற்று (12.06.2024) சென்னையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமையில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், முதன்மை செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், மு.வே. செந்தில் குமார், இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், திரையுலக பிரபலங்கள், தொழிலாளர் துறை உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.